4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 212/2017 நாள்: 02.06.2025 பி.சா.2 – அருள்ராஜ்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை -

1991ம் ஆண்டு ஆவண எழுத்தராக நான் பதிவு செய்து கொண்டேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் ஆமாம். ஆவண எழுத்தர் ஜானகிராமன் எந்த ஆண்டு இறந்தார் என்பதை தெரிவிப்பதற்காக அழைப்பாணை வந்தது. வழக்கு விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. ஜானகிராமன் எந்த ஆண்டு இறந்தார் என்று என்னால் சொல்லமுடியாது. என்னுடைய அடையாள அட்டையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஜானகிராமன் 1984 ம் ஆண்டு முதல் ஆவண எழுத்தராக இருந்து வந்தார். அவர் எங்கள் அலுவலகத்தில் பணிபுரிந்தார் என்பதை காட்டுவதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. ஜானகிராமன் தனியாக அலுவலகம் வைத்திருந்தாரா என்றால் இல்லை, சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எழுத்தர்கள் இருக்கும் இடத்தில் அமர்ந்து பணி செய்வார். ஜானகிராமன் எனது உறவினரல்ல. ஜானகிராமன் ஆவண எழுத்தர் என்பதை தவிர அவரைப்பற்றி வேறு எந்த விவரங்களும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். உடுமலைபேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் எங்களுக்கு என்று சங்கம் உள்ளது என்றால் சரிதான். ஆவண எழுத்தர்கள் குறித்த விவரம் அந்த சங்கத்தில் இருக்கும் என்றால் சரிதான். நான் சங்கத்தில் நிர்வாக பதவிகளில் இல்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்பட்ட பி.சா.ஆ.6 ஆவணத்தை இதற்கு முன்பு நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பி.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள கையெழுத்து

ஜானகிராமனுடையது தானா என்று என்னால் உறுதியாக சொல்லமுடியாது என்றால் சரிதான்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

C RAJALINGOM Digitally signed by C RAJALINGOM Date: 2025.06.02 15:00:48 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.